SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜூலை 2024

**(Level I Examination – July 2024)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜூலை 2024**

# (104) வணிகச் சூழல்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

*வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**1.1.** (2)

**1.2.** (2)

**1.3.** (4)

**1.4.** (4)

**1.5.** (2)

**1.6.** (1)

**1.7.** (3)

**1.8.** (1)

**1.9.** (2)

**1.10.** (3)

1.11. உண்மை

1.12. உண்மை

1.13. பொய்

1.14. பொய்

1.15. உண்மை

**1.16. கீழுள்ளவற்றில் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

1. சந்தை அணுகலுக்கு வசதியளித்தல்
2. விநியோக வினைத்திறன்
3. மேலதிக சேவைகளை வழங்குதல்
4. வணிகத்தின் சுமையை குறைத்தல்
5. வழங்கல் சங்கிலியை விரைவுபடுத்துதல்
6. சந்தை அடைவை அதிகரித்தல்
7. கிரய வினைத்திறன்
8. உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
9. விற்பனையை அதிகரித்தல்
10. நேரத்தைச் சேமித்தல்
11. வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல்

**1.17.**

பசுமைத் தொழில் முயற்சியாண்மை என்பது சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் அல்லது தேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் இயற்கை சூழலில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முயற்சியாண்மை செயற்பாடு ஆகும்.

***மாற்று விடை***

பசுமைத் தொழில் முயற்சியாண்மை என்பது பொருளாதார வெற்றி மற்றும் நேர்மறையான சுற்றுச்சூழல் தாக்கத்தை நோக்கமாகக் கொண்ட, சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் வணிகங்களை உருவாக்குதல், சுற்றுச்சூழல் நட்பு உற்பத்திகள் அல்லது சேவைகளை வழங்குதல் ஆகும்.

aat SRI LANKA

1.18. **கீழுள்ள வேறுபாடுகளில் ஏதேனும் இரண்டைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

| **அம்சங்கள்** | **பணச் சந்தை** | **மூலதன சந்தை** |
|---|---|---|
| நிதியிடல் காலம் | ஒரு வருடத்திற்கு மேற்படாத குறுங்கால கடன் பெறத்தகு நிதிகளை கையாளும். | ஒரு வருடத்திற்கு மேலான நீண்டகால நிதிகளுக்கான சந்தை. |
| நிதி வழங்கல் | தொழிற்துறைகளின் தற்போதைய வணிகச் செயற்பாடுகளுக்கான தொழிற்படு மூலதனத் தேவைகள் மற்றும் அரசின் குறுங்காலத் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. | வியாபாரம் மற்றும் வர்த்தகத்தின் நிலையான மூலதனத் தேவைகள் மற்றும் அரசின் நீண்டகாலத் தேவைகளுக்கு நிதியீட்டும் நிதிகளை வழங்கும். |
| சாதனங்களுடன் தொடர்புபடல் | வர்த்தகஉண்டியல்கள் (மாற்றுண்டியல்,திறைசேரி உண்டியல், வர்த்தகத் தாள்கள்) போன்ற சாதனங்களுடன் தொடர்புபடும். | பங்குகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், அரச பிணையங்கள் போன்ற சாதனங்களுடன் தொடர்புபடும். |
| முக்கிய நிறுவனத்தின் வகிபாகம் | மத்திய வங்கி மற்றும் வணிக வங்கிகள் பணச் சந்தையில் முக்கிய நிறுவனங்கள் ஆகும். | அபிவிருத்தி வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் மூலதன சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. |
| சாதனங்களின் கிடைப்பனவு | பணச்சந்தை சாதனங்கள் பொதுவாக இரண்டாம் நிலை சந்தையைக் கொண்டிராது. | மூலதன சந்தை கருவிகள் பொதுவாக இரண்டாம் நிலை சந்தைகளைக் கொண்டிருக்கும். |
| உபபிரிவு | பணச் சந்தையில் அத்தகைய உபபிரிவு காணப்படாது. | மூலதனச் சந்தையில் முதன்மைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என்ற பிரிவுகள் உள்ளன. |
| கொடுக்கல் வாங்கல் இடம் | பரிவர்த்தனைகள் பெரும்பாலும் தொலைபேசியில் இடம்பெறுவதுடன், முறையான பரிமாற்று இடம் காணப்படாது. | பரிவர்த்தனைகள் முறையான இடத்தில் நடைபெறும். உ-ம்: பங்குச் சந்தை. |

aat SRI LANKA

**1.19. கீழுள்ளவற்றில் ஏதேனும் இரண்டினைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

1. கணக்கில் போதிய நிதியின்மை
2. கையொப்பம் இணக்கமின்மை
3. வங்கிக் கணக்கில் இருந்து பணம் செலுத்துவதை வரையுனர் நிறுத்தியிருத்தல்
4. காசோலை சரியான முறையில் எழுதப்படாதிருத்தல்
5. வரையுனர் கணக்கு மூடப்பட்டிருத்தல்
6. காசோலை மங்கலாகவும் தெளிவற்றதாகவும் இருத்தல்

**1.20. கீழுள்ளவற்றில் ஏதேனும் இரண்டினைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

| முயற்சியாளர் | முகாமையாளர் |
|---|---|
| வணிகத்தை ஆரம்பிப்பதற்கான முக்கிய திறவுகோல். | தொடக்க வணிகத்தை கொண்டு நடாத்துபவர். |
| இடர் தாங்கும் முயற்சியாளர் இலாபம் அல்லது நட்டத்தை அனுபவிப்பார். | முகாமையாளர் வணிகத்தை சிறப்பாக நடாத்துவதற்கான தனது திறனைப் பயன்படுத்துவார். |
| முயற்சியாளர் வணிகத்தின் உரிமையாளர் ஆவார். | முகாமையாளர் வணிகத்தின் ஊழியர் ஆவார். |
| முயற்சியாளர் சமூகம் மற்றும் அரசாங்கத்திற்கு பொறுப்புடையவர் | முகாமையாளர் வணிக உரிமையாளரின் செயல்களுக்குப் பொறுப்பாவார். |
| வலு தன்னிச்சையாக உருவாக்கப்படும். | பதவி அதிகாரத்துடன் இணைந்துள்ளது. |
| வணிக வாய்ப்புகள் அடையாளம் காணப்படும். | வணிகப் பிரச்சினைகள் அடையாளம் காணப்படும். |
| சமூக நலன்கள் மற்றும் சமூகப் பொறுப்புகளில் கவனம் செலுத்தும். | வியாபாரத்தின் நன்மைகளில் கவனம் செலுத்தும். |

***(02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)***

***பிரிவு A முடிவு***

aat SRI LANKA

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01: வணிக நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்***

**(a) கீழுள்ளவற்றில் ஏதேனும் இரண்டினைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெற அனுமதிக்கும்.**

[1] வரையறுக்கப்படாத கம்பனிகள்

[2] உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

[3] பொதுக் கம்பனிகள்

[4] கரைகடந்த கம்பனிகள்

[5] நிரற்படுத்திய கம்பனிகள்

*(02 புள்ளிகள்)*

**(b)**

| **அம்சம்** | **தனி வியாபாரி** | **பொறுப்பு வரையறுத்த கம்பனி** |
|---|---|---|
| சட்ட ஆளுமை | சட்ட ஆளுமை இல்லை: உரிமையாளரும் வணிகமும் சட்டத்தின் பார்வையில் ஒன்றாகவே கருதப்படும். | தனியான சட்ட ஆளுமை: சட்டத்தின் பார்வையில் உரிமையாளரும் வணிகமும் வேறுபட்டவர்கள் ஆவர். |
| கட்டுப்பாடு | உரிமையாளரால் கட்டுப்படுத்தப்படும். | ஆளுகையானது பங்குதாரர்களின் சட்டரீதியான கட்டுப்பாடு மற்றும் சட்டக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. |
| தொடர்ச்சித்தன்மை | குறைவு: உரிமையாளரின் வாழ்க்கைக்குப் பிறகு வணிகம் தொடர்வதில்லை. | அதிகம்: வணிகத்தின் இருப்பு உரிமையாளரின் இருப்பால் பாதிக்கப்படாது. |
| கணக்கீடு மற்றும் கணக்காய்வு | கட்டாயம் இல்லை | சட்ட விதிமுறைகள் காரணமாக கட்டாயமானது. |

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(c) பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு நன்மைகள் மற்றும் தீமைகளை (ஒவ்வொன்றிலும் இரண்டு) குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

**ஒரு தனியார் வரையறுத்த கம்பனியின் நன்மைகள்**

- குடும்பம் மற்றும் உறவினர்களின் உரிமைகளைப் பேண முடியும்.
- வரையறுத்த எண்ணிக்கையிலான உறுப்பினர் மத்தியில் வணிகத்தின் கட்டுப்பாட்டை தக்கவைத்துக்கொள்ள முடியும்.
- வரையறுத்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களிடையே இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும்.
- அதிக மூலதனத்தை திரட்ட முடியும்.
- பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
- சட்ட ஆளுமையுடையதாக இருத்தல்.
- பொதுக் கம்பனிகளுடன் ஒப்பிடும்போது சட்டரீதியான தாக்கமின்மை.
- வணிகத்தின் தொடர்ச்சித்தன்மை காணப்படல் (தொடர்ந்து இயங்குதல்)
- முகாமையினால் சபை பயனுறுதி மிக்க வகையில் முகாமை செய்யப்படல்
- அனைத்துப் பங்குதாரர்களினதும் ஒருமனதான தீர்மானம் அவசியமின்றிக் கம்பனியின் பெரும்பாலான பணிகளை நிறைவேற்ற முடியும்.
- கடன் பரிசோதனையின்றிப் பங்குதாரர்களுக்குப் பங்கிலாபத்தை வழங்க முடியும்.
- பல்வேறு வரிச் சலுகைகள்

**ஒரு தனியார் வரையறுத்த கம்பனியின் தீமைகள்**

- பொதுக் கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் குறைவான மூலதனத் திரட்டல்
- பங்குச் சந்தையில் நிரற்படுத்த முடியாது (உத்தியோகப்பூர்வமாக பட்டியலிடப்பட்ட கம்பனியாக இருக்க முடியாது)
- பங்குகளை சுயாதீனமாகக் கைமாற்ற முடியாது.
- கம்பனிகள் சட்டத்தின் சட்டத் தேவைகளுக்கு இணங்கவேண்டியிருத்தல்.
- கூட்டிணைத்தல் சிக்கலானதாகவும் செலவு கூடியதாகவும் இருக்கும்.
- அதிகரித்த நிர்வாக செலவினம்.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| *அத்தியாயம் 03 பகுதி 1 - வணிக துணை சேவைகள்: பணத்தின் தொழிற்பாடுகள்* |
|---|

**(a)**

நாணயம் என்பது நாட்டின் பணவியல் ஆணைக்குழுவினால் (இலங்கை மத்திய வங்கி) அதன் முக்கிய நாணய அலகின் கீழ் வெளியிடப்பட்ட நாணயக் குற்றிகள் மற்றும் தாள்களைக் குறிக்கும். இவை சட்டபூர்வ செல்லுபடியாகும் பணம் அல்லது பட்டயப் பணம் எனப்படும்.

***மாற்று விடை***

நாணயம் என்பது பொதுவாக, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பரிமாற்ற ஊடகமாகப் பயன்படுத்தப்படும் வகையில் அரசு அல்லது மத்திய வங்கியால் வழங்கப்பட்ட காகிதத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் உள்ளடங்கலான ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது பொருளாதாரப் பிராந்தியத்தினுள் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பண முறைமையைக் குறிக்கும்.

*(02 புள்ளிகள்)*

**(b) கீழுள்ளவற்றில் ஏதேனும் நான்கைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

[1] சரியான திகதி

[2] பெறுவோன் பெயர்

[3] தொகை சொற்கள் மற்றும் இலக்கங்களில்

[4] கையொப்பம்

[5] மாற்றங்களைத் தவிர்த்தல்

[6] அடி இதழைப் பயன்படுத்துதல்

[7] மொழி: ஒரே மொழி ஊடகத்தைப் பயன்படுத்துதல்

[8] எளிதில் அழிக்க முடியாத மையின் பயன்பாடு

*(04 புள்ளிகள்)*

**(c)** ***கீழுள்ளவற்றில் ஏதேனும் இரண்டை விளக்கினால் முழு புள்ளிகள் கிடைக்க அனுமதிக்கும்.***

(1) **மேம்பட்ட நெகிழ்ச்சி மற்றும் வசதித்தன்மை**: இ-பணம், பௌதீகரீதியான பணத்தை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமின்றி, எந்த வேளையிலும் எந்த இடத்திலுமிருந்தும் விரைவான மற்றும் எளிதான பரிவர்த்தனைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறது.

(2) **மேம்பட்ட பாதுகாப்பு**: இ-பணப் பரிவர்த்தனைகள் பொதுவாக குறியாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுவதனால், பௌதீகரீதியான பணத்தை கையாளும் போது இடம்பெறும் திருட்டு, இழப்பு அல்லது மோசடி போன்ற இடர்களைக் குறைக்கிறது.

aat SRI LANKA

(3) **வரலாற்றுப் பதிவுகள்**: ஒவ்வொரு பரிவர்த்தனையின் பதிவின் வலுவான எண்ணியலாக்கப் பதிவைக் கொண்டுள்ளமையினால் இலத்திரனியல் பணத்தின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

(4) **மோசடி நடவடிக்கைகளைக் குறைத்தல்**: இலத்திரனியல் பணமானது ஒவ்வொரு பரிவர்த்தனையினதும் விரிவான வரலாற்றுப் பதிவுகளை வழங்குவதால். பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பது மற்றும் பொருளாதாரத்தின் மூலம் அவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிதானது. இது பாதுகாப்பை அதிகரிப்பதுடன், மோசடி நடவடிக்கைகளை குறைக்க உதவுகிறது.

(5) **நேரத்தையும் வளங்களையும் சேமித்தல்**: இ-பணத்தினைப் பயன்படுத்துவதற்கான முக்கிய காரணம், அது நேரம் மற்றும் வளப் பயன்பாட்டைக் குறைப்பதாகும். பரிவர்த்தனைகள் எங்கு வேண்டுமானாலும் நிகழ்த்தப்படலாம்.

(6) **வாழ்க்கை முறை**: நவீன தொழிநுட்பம் வாழ்க்கை முறையை மாற்றுவதுடன், அங்கு மக்கள் சமீபத்திய போக்குகளைப் பயன்படுத்துவதே மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று உணர்கிறார்கள். மின்னியல் பணமும் கணிசமான பயனர்களால் அதே வழியில் உணரப்படுகிறது.

(7) **ஏற்புடமை:** உலகம் முழுவதும் உள்ள பல வணிகங்கள் மின்னியல் பணத்தின் மேம்பட்ட பயன்பாட்டை செயற்படுத்துகின்றன.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 - வணிகங்களில் அரசாங்கத்தின் செல்வாக்குகள்***
***அத்தியாயம் 07 – சிறிய நடுத்தர வணிகங்கள்***

**(a)** ***கீழுள்ளவற்றில் ஏதேனும் மூன்றைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.***

[1] பொருளாதார வளர்ச்சி

[2] பொருளாதார அபிவிருத்தி

[3] வேலைவாய்ப்பை நிரப்புதல்

[4] பொருளாதார ஸ்திரத்தன்மை

[5] நியாயமான வருமானக் கொள்கையை உருவாக்குதல்

[6] சிறந்த சர்வதேச வர்த்தகத்தை உருவாக்குதல்

[7] நிலைபேறான அபிவிருத்தி

*(03 புள்ளிகள்)*

**(b)** சமூகத்திற்கான டிஜித் பிரிண்டர் வணிகத்தின் பொறுப்புகள்

[1] **சுற்றுச்சூழல் பொறுப்பு**: சுற்றுச்சூழலுக்கு உகந்த அச்சிடுதல் நடைமுறைகளைப் பின்பற்றி, கழிவுகளைக் குறைப்பதன் மூலம் அவர்களின் செயற்பாடுகளின் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல்.

[2] **நெறிமுறைசார் வணிக நடைமுறைகள்**: வெளிப்படையாகவும் நியாயமாகவும் செயற்படுதல், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் ஊழியர்களுடன் நேர்மையான பரிவர்த்தனைகளை உறுதி செய்தல்.

[3] **சமூக ஈடுபாடு**: வேலை வாய்ப்புகள், பொறுப்பான வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சமூக முயற்சிகளில் பங்கேற்பதன் மூலம் உள்நாட்டு சமூகங்களுக்கு ஆதரவளித்தல்.

*(03 புள்ளிகள்)*

**(c) கீழுள்ள காரணங்களில் ஏதேனும் இரண்டு காரணங்களைக் கூறுவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்**

- **நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் SMEகள் பங்களிக்கின்றன.**

உலக வங்கியின் அறிக்கையின்படி, வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் முறையான SMEக்கள் தேசிய வருமானத்தில் (GDP) 40% வரையான பங்களிப்பை வழங்குகின்றன. முறைசாரா SMEகள் உள்ளடக்கப்படும்போது இந்தப் பங்களிப்பு வீதங்கள் கணிசமாக அதிகமாக இருக்கும். இலங்கையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 52% சிறு நடுத்தர வணிகத்தால் சூழப்பட்டுள்ளது, இது மற்ற தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை விட ஒப்பீட்டளவில் அதிகமாகும்.

- **வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்**

வேலை வாய்ப்பை உருவாக்குவது சிறிய நடுத்தர நிறுவனங்களின் நன்மைகளில் ஒன்றாவதுடன், வளர்ந்த மற்றும் வளர்முக நாடுகளில் SME மூலம் உருவாக்கப்பட்ட வேலைகளில் பெரும்பங்கு ஆகும். மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் (2017) நடத்தப்பட்ட தொழில்துறை கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 45% ஆன வேலை வாய்ப்புகள் சிறிய நடுத்தர நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

- **உள்நாட்டு சேமிப்புகளை திரட்டுதல்**

உள்நாட்டு சேமிப்பைத் திரட்டுவது மூலதன உருவாக்கத்தின் ஒரு செயன்முறையாகும். SMEகள் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்நாட்டு மூலங்களிலிருந்து மூலதனத்தை திரட்டுகின்றன. இதுபோன்ற சேமிப்புகள் முதலீடாக மாற்றப்பட்டு அதன் மூலம் மக்கள் தங்கள் உள்நாட்டு வருமானத்தை அதிகரிக்க முடியும்.

- **வறுமை ஒழிப்பு**

SMEகள் வரையறுக்கப்பட்ட முதலீட்டில் ஆரம்பிப்பதால், எந்த மட்டத்திலான தொழில் முனைவோரும் வியாபாரத்தை தொடங்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இது தொழில்முனைவோர் இலாபம் ஈட்டுவதற்கு பங்களிப்பதுடன், மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெறவும் உதவும். இதன் மூலம் மக்களின் வறுமை நிலையை ஒழிக்க அல்லது குறைக்க முடியும்.

- **வருமானப் பகிர்வு**

SMEகள் வேலை உருவாக்கத்திற்கு பங்களிக்கின்றன. குறிப்பாக, குறை-திறனான மற்றும் திறமையற்ற தொழிலாளர்களை உள்வாங்கும் இரண்டாம் நிலை தொழிலாளர் சந்தையில் முக்கிய முதலாளிகளாக அவர்களின் பங்கு, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு SME ஊதியத்தில் இருந்து வருமானத்தை அதிகரிக்க உதவுகிறது.

- **பிராந்திய வளர்ச்சி**

வேலைகளை உருவாக்குவதில் SMEகளின் பங்கு வறுமைக் குறைப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது, இதுவே குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியில் கூட SMEகள் தொடர்ந்து உயிர்வாழ்வதற்குக் காரணம் ஆகும்.

- **வளைந்து கொடுக்கும் தன்மை மற்றும் புதிய பொருளாதார சூழலுக்கு ஏற்ப மாறும் திறன்**

SMEகளின் ஒரு தனித்துவமான பண்பு அவற்றின் நெகிழ்வுத்தன்மை ஆகும். அவை குறைவான மூலதனச் செறிவு மற்றும் அதிக ஊழியச் செறிவு கொண்டிருப்பதுடன், பெரும்பாலும் திறமையற்ற மற்றும் குறை-திறன் கொண்ட தொழிலாளர்களைப் பயன்படுத்துகின்றன. மேலும் மாற்றுவதற்கு ஏற்ற எளிய நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றன.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - வணிக நிறுவனங்களில் வர்த்தகம்***
***அத்தியாயம் 05 - வணிகத்தில் அரசாங்கத்தின் செல்வாக்குகள், வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகத்தின் சமூகப் பொறுப்பு***
***அத்தியாயம் 07 – முயற்சியாண்மை***

**(a) கீழுள்ள வேறுபாடுகளில் ஏதேனும் இரண்டைக் கூறுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.**

| அம்சம் | மொத்த வியாபாரம் | சில்லறை வர்த்தகம் |
|---|---|---|
| தரப்பினர் | உற்பத்தியாளர் (விற்பனையாளர்) மற்றும் மொத்த விற்பனையாளர் (கொள்வனவாளர்) | சில்லறை விற்பனையாளர் (விற்பனையாளர்) மற்றும் நுகர்வோர் (கொள்வனவாளர்) |
| விற்கப்பட்ட அளவு | பொதுவாக பாரியளவான பொருட்கள் வணிகங்கள் / சில்லறை விற்பனையாளர்கள் / பிற மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படும். | பொதுவாக சிறிய அளவிலான பொருட்கள் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்கப்படும். |
| வாடிக்கையாளர்களின் வகை | வணிகங்களுக்கு சேவை செய்கிறது (B2B பரிவர்த்தனைகள்) | தனிப்பட்ட நுகர்வோருக்கு சேவை செய்கிறது (B2C பரிவர்த்தனைகள்) |
| விற்பனை முறை | இது கணிசமான அளவிலான கடன் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது | இந்த பரிவர்த்தனைகள் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளுடன் நிறைவேற்றப்படும். |
| இயக்கங்களின் மீடிறன் | ஒரே கட்சிகளுக்கு இடையே மீண்டும் மீண்டும் நடைபெறும். | ஒரே கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர்கள் பங்கேற்கும் அவசியமில்லை. |
| வியாபாரக் கழிவீடுகள் | கணிசமாக பயன்படுத்தப்படும் | அதிகம் பயன்படுத்தப்படாது |

*(02 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b) கீழுள்ள தாக்கங்களில் ஏதேனும் இரண்டை விளக்கினால் முழு புள்ளிகள் கிடைக்கும்**

[1] **தளம்பலடையும் மூலப்பொருள் விலைகள்**:

காலநிலை மாற்றமானது இந்தோனேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிய மரத்தின் கிடைப்பனவுத் தன்மை மற்றும் விலையை சீர்குலைக்கிறது. இது தருஸ் மரத்தளபாட வணிகத்தின் அதிகரித்த செலவுகள் மற்றும் நிதிசார் நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கும்.

**[2] வழங்கல் சங்கிலி இடையூறுகள்:**

சுற்றுச்சூழல் மாற்றங்கள் இறக்குமதி செய்யப்பட்ட மரத்தின் வழங்கலில் தாமதங்கள் அல்லது பற்றாக்குறையை ஏற்படுத்தி, உற்பத்தி அட்டவணைகள் மற்றும் வாடிக்கையாளர் தேவையை சரியான நேரத்தில் பூர்த்தி செய்யும் திறனை பாதிக்கலாம்.

[3] **புதிய சந்தைகளையும் வாய்ப்புகளையும் உருவாக்குதல்**: வெவ்வேறு நாடுகளில் புதிய சந்தைகள் மற்றும் வாய்ப்புகள் உருவாக்கப்பட, மக்கள் அந்த சந்தைகளில் நுழைய முடியும்.

[4] **திறமையான தொழிலாளர்களுக்கான அணுகல்**

உலகமயமாக்கல் உழைப்பு உலகம் முழுவதும் செல்ல உதவுவதன் மூலம் திறமையான பணியாளர்களை பல்வேறு நாடுகளில் காணலாம்.

[5] **அளவுத்திட்ட சிக்கனங்கள்**

அளவுத்திட்ட சிக்கனங்களிலான அதிகரிப்பு. உலகளாவிய சூழலுக்குள் நுழைவதால் உற்பத்தி மற்றும் விற்பனை செயன்முறைகள் இரண்டிலும் அளவுத்திட்ட சிக்கனங்கள் அதிகரிக்கின்றன.

[6] **புதிய தொழிநுட்பம் மற்றும் அறிவுக்கான அணுகல்**

உலகமயமாக்கல் மூலம் புதிய தொழிநுட்பங்கள் மற்றும் அறிவுக்கான அணுகலை நிறுவனம் பெறும்.

***(04 புள்ளிகள்)***

**(c)** ***கீழுள்ளவற்றில் ஏதேனும் நான்கு தாக்கங்களைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்***

[1] புத்தாக்கம்

[2] பின்பற்றக்கூடிய தன்மை / நெகிழ்வுத்தன்மை

[3] இடருக்கு முகம்கொடுத்து நிர்வகிக்கும் திறன்

[4] தந்திரோபாய சிந்தனை

[5] தூரநோக்கு

[6] படைப்பாற்றல்

[7] தன்னம்பிக்கை

[8] புலனுணர்வு

[9] புதிய வணிக வாய்ப்புகளை அடையாளம் காண முடியும்

[10] ஊக்கத்துடன் இருத்தல்

[11] தீர்மானம் மிக்க தன்மை / விரைவான தீர்மானம்

[12] அர்ப்பணிப்பு - அர்ப்பணிப்பு / ஈடுபாடு / கடின உழைப்பு

[13] சுதந்திரம்

[14] சாதனை சார்ந்த தன்மை - சாதனை

[15] நேர்க்கணியத்தன்மை

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

***பிரிவு B முடிவு***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02 - வணிகச் சூழல் மற்றும் வணிகங்களிலான அதன் தாக்கம்***
***அத்தியாயம் 03 பகுதி 1 - வணிகத் துணைச் சேவைகள்: பணத்தின் தொழிற்பாடுகள்***
***அத்தியாயம் 03 பகுதி V- துணை சேவைகள்: காப்புறுதி***
***அத்தியாயம் 05 - வணிகத்தில் அரசாங்கத்தின் செல்வாக்குகள், வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒரு வணிகத்தின் சமூகப் பொறுப்பு***

**(a)** Eco-Clean வணிகச் சூழலின் SWOT பகுப்பாய்வு

**(1) பலங்கள்:**

(i) புத்தாக்க வணிக மாதிரி

(ii) வலுவான பண்டக்குறி மதிப்பு

(iii) வணிகம் பற்றிய மல்லிகாவின் அறிவு

(iv) ஆதரவான பங்குடமைகள்

(v) வளர்ந்து வரும் சந்தைப் பிரிவுக்கு உதவுதல்.

**(2) பலவீனங்கள்:**

(i) ஊழியர் புரள்வு

(ii) குறிப்பிட்ட வழங்குனர்களை நம்பியிருத்தல் (சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி வழங்குனர்களை சார்ந்திருத்தல்)

(iii) திருப்தியற்ற வாடிக்கையாளர்கள்

(iv) வரையறுக்கப்பட்ட வளங்கள்

SRI LANKA

**(3) வாய்ப்புகள்:**

(i) விரிவாக்கப்பட்ட சந்தை / சந்தை வளர்ச்சி

(ii) தொழிநுட்ப முன்னேற்றங்கள்

(iii) ஆதரவான அரச கொள்கைகள்

(iv) நிலைபேறான தன்மை அம்சத்தில் கவனம் செலுத்துதல்.

**(4) அச்சுறுத்தல்கள்**

(i) பாதகமான பொருளாதார நிலைமைகள்

(ii) நம்பகமற்ற வழங்குனர்கள்

(iii) அதிகரித்த போட்டி

*(06 புள்ளிகள்)*

***(b) கீழுள்ள அக்கறைதாரர்களில் ஏதேனும் நால்வரைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.***

[1] வாடிக்கையாளர்கள் / சேவை பெறுனர்கள்

[2] ஊழியர்கள்

[3] வழங்குனர்கள்

[4] அரசு / ஒழுங்குமுறை அதிகாரசபைகள்

[5] போட்டியாளர்கள்

[6] சமூகம்

[7] கடன் கொடுத்தோர்.

[8] வங்கிகள்

[9] உரிமையாளர்கள்

***(02 புள்ளிகள்)***

***(c) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் நான்கு சேவைகளைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகள் பெறப்பட அனுமதிக்கும்.***

[1] கொடுப்பனவு செயலாக்க சேவைகள்

[2] பண முகாமை சேவைகள்

[3] அந்நிய செலாவணி சேவைகள்

[4] வங்கி வரைவோலைகளை வழங்குதல்

[5] தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் முக்கியமான ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக பெட்டகங்களைப் பராமரித்தல்.

[6] நிலையியற் கட்டளைகளை நிறைவேற்றுதல்

[7] நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகளினை ஏற்றுக்கொள்ளல்

[8] பணம் அனுப்புதல்

[9] கடன் கடிதங்களை வழங்குதல்

[10] குத்தகை சேவைகள்

[11] நிரற்படுத்திய கம்பனிகளின் பங்கு வழங்கல் முகாமை

[12] வங்கி உத்தரவாதங்களை வழங்குதல்

[13] கடனட்டைகள், வரவட்டைகள் மற்றும் ஸ்மார்ட் அட்டைகள் போன்ற இலத்திரனியல் பணத்தை வழங்குதல்.

[14] நிதி ஆலோசனை சேவைகளை வழங்குதல்

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(d)** கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் இரண்டு காரணங்களை விளக்கினால் முழுமையான புள்ளிகள் கிடைக்கும்.

[1] **இடர் குறைப்பு**: சொத்து சேதம், விபத்துக்கள் அல்லது பொறுப்புக் கோரிக்கைகள் போன்ற சாத்தியமான இடர்களுக்கு எதிராக எக்கோ-க்ளீனுக்கு காப்புறுதி பாதுகாப்பு வழங்குவதனால், கடுமையான நிதி இழப்பின்றி எதிர்பாராத நிகழ்வுகளில் இருந்து வணிகம் மீண்டு வருவதை உறுதி செய்கிறது.

[2] **இணக்கம் மற்றும் நம்பகத்தன்மை**: பொருத்தமான காப்புறுதி உள்ளடக்கம் ஒன்றினை வைத்திருத்தல், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுடன் Eco-Clean இன் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதுடன், வணிகமானது உறுமுரிமை நிகழ்வுகளுக்குத் தயாராக இருப்பதையும் சட்டத் தேவைகளுக்கு இணங்குவதையும் காட்டுகிறது.

[3] **வணிக பங்களிப்பு**: எந்தவொரு வணிகத்திலும் குறிப்பாக எந்தவொரு பங்காளியின் மரணத்திலும் நிறுத்தப்படலாம். பங்குதாரர் இறக்கும் போது காப்புறுதிக் கொள்கைகள் போதுமான நிதியை வழங்குகின்றன. சொத்துக் காப்பீட்டின் உதவியுடன், வணிகமானது பேரழிவு, மிகப்பெரிய விரயம் அல்லது இழப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

[4] **ஊழியர்களின் நலன்**: ஊழியர்களின் நலன் என்பது தொழில்தருனரின் பொறுப்பாகும். ஊழியர்களுக்கு காப்புறுதி வசதியை வழங்குவது அவர்களின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தி, வேலைக்கான ஊக்குவிப்பை அதிகரிக்கும்.

[5] **கடன் புறநோக்கினை மேம்படுத்துதல்**: கடனுக்கான பிணையமாக காப்புறுதிக் கொள்கையை ஈடுவைத்து வணிகம் கடனைப் பெறலாம். காப்புறுதி செய்யப்பட்ட நபர்கள் தங்கள் மரணத்தின் உறுதியின் காரணமாக அதிக கடன்களைப் பெறுகின்றனர்.

*(04 புள்ளிகள்)*

SRI LANKA

***(e) இலங்கையில் மிகவும் நிலையான எதிர்காலத்திற்கு Eco-Clean பங்களிக்கும் முறை.***

[1] **சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை ஊக்குவித்தல்**: Eco-Clean அதன் வாடிக்கையாளர்களிடையேயும் பரந்த சமூகத்தினரிடையேயும் நிலைபேறான நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழல் நட்பு உற்பத்திகள் மற்றும் முறைகளை பின்பற்றுவதை ஊக்குவிக்கிறது.

[2] **பசுமை முன்முயற்சிகளை ஆதரித்தல்**: பசுமை கட்டிட முன்முயற்சிகள் மற்றும் பிற சுற்றுச்சூழல் திட்டங்களுடன் கூட்டுசேர்வதன் மூலம், Eco-Clean இலங்கையில் பரந்த நிலைபேறான தன்மை முயற்சிகளுக்கு பங்களிப்பதுடன், சுற்றுச்சூழல் உணர்வுள்ள சமூகத்தை நோக்கி முறையான மாற்றத்தை ஏற்படுத்த உதவுகிறது.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

***பிரிவு C இன் முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*